1981 மார்ச் 5] [திரு. எல். இளையபெருமாள்]

யோகத்தில் கொடுத்த அதிகாரத்தை நீங்கள் உபயோகப்படுத்தாமல் இருக்கும்போது ஏன் உங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டும் என்ற நிலையில் தான் அண்ணல் அம்பேத்கார் அன்று என்ன சொன்னாரோ அந்தக் கருத்தைத்தான் என்னுடைய நிலைமையிலே நான் சொன்னேனே தவிர, சகோதரர் ரகுமான் கான் அவர்கள் சொன்னதைப்போல அவருடைய வாக்கு வாதத்தில் நான் குறுக்கிட்டு சொல்லவில்லை. இதிலே ஒன்றையும் நீங்கள் மறைக்க முடியாது. கொடுத்த அதிகாரத்தை பயன் படுத்தாமல் இருக்கும்போது அதிக அதிகாரம் உங்களுக்குக் கொடுக்க தேவையில்லை, கொடுத்தாலும் உங்களிடம் எனக்கு நம்பிக்கை இல்லை, நீங்கள் துஷ்பிரயோகம் செய்து ஏமாற்றுகிறீர்கள் என்று வருத்தத்தோடு சொன்னேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1–20]

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு மாநில அரசு மக்களுக்குத் தேவையான திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தன்னிடத்தில் உள்ள அதிகாரங்களை அல்லது மாநில சுயாட்சி மூலமாகப் பெறக் கூடிய—இன்னும் பெறவில்லை—எதிர்காலத்தில் பெறக்கூடிய அதிகாரங்களைத் தவறாகப் பயன் படுத்துவார்களானால் அந்த மாநில அரசை மாற்றுவதற்கு அந்த மாநிலத்தில் இருக்கிற மக்களுக்கு உரிமை உண்டு. அப்படிப்பட்ட உரிமை இருக்கிற நேரத்தில் மத்திய அரசு எந்தவிதமான பயமும் இல்லாமல் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை சுய ஆட்சியை வழங்கலாம் என்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து.

8. அறிவிப்பு

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற் கிணங்க ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பேரவையின் நிகழ்ச்சிகளில் கீழ்க்கண்ட மாறுதல் செய்யப் பட்டுள்ளது :—

6–3–1981 (வெள்ளிக்கிழமை) அன்று அரசு அலுவல்கள் என்ற தலைப்பில் முதல் இனமாக அறிவிக்கப்பட்டிருந்த தமிழ் நாடு 1981-ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன்வடிவு—ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும் என்பது அன்றைய நிகழ்ச்சி நிரலில் மற்ற சட்ட முன்வடிவுகளுக்குப் பிறகு கடைசி இனமாக எடுத்துக் கொள்ளப்பெறும்.

பேரவைக் கூட்டம், 1980-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 7-ஆம் நாளன்று ஒத்திவைக்கப்படும்.